RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt1913

# பாலக்காடு மாவட்டமும் பெயர்க்காரணமும்

**செ. ஆறுச்சாமி [அ,*]**

[அ] தமிழ் மற்றும் இந்திய மொழிகள் துறை, கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம், கோயம்புத்தூர்-641021, , இந்தியா.

# Palakkad District and reason behind its Name

**C. Aruchamy [a,*]**

[a] Department of Tamil & Indian Languages, Karpagam Academy of Higher Education, Coimbatore, Tamil Nadu 641021, India

***Corresponding Author**

umarani.b@kahedu.edu.in

Received : 09-11-2018
Accepted : 06-01-2019

**ABSTRACT**

Palakkad, also known as Palghat, is a city and municipality in the state of Kerala in southern India, spread over an area of 26.60 km² and is the administrative headquarters of the Palakkad District. Palakkad, known for beautiful landscapes, is a district in Kerala. The specialties of this district are examined here.

.

**Keywords:** Palakkad, District, Name



கேரளப் பல்கலைக் கழகத்தில் “ பாலக்காடு மாவட்ட பறையரின மக்களின் வாழ்வியல் ஓர் ஆய்வு ” என்ற தலைப்பில் முனைவர் பட்டமும் , “சாமுத்திரிகா லட்சணம்” என்ற தலைப்பில் இளமுனைவர் பட்டமும் பெற்றுள்ளார். “ஆதாமின்டே பாலவும் இராமன்டே சேதுவும்” என்ற மலையாள நூலினைத் தமிழில் 2010 ஆம் ஆண்டு “ஆதாமின் பாலமும் இராமனின் சேதுவும்” என்னும் தலைப்பில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். கல்லூரிப்பேராசிரியராக 10 ஆண்டு காலம் பணியாற்றியிருக்கிறார். தற்பொழுது கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியர் ஆகப்பணிபுரிந்து வருகிறார். நாட்டுப்புறவியலில் ஆர்வமுள்ள இவர் தொடர்ந்து அத்துறையில் பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதிவருகிறார்.

## முன்னுரை

இயற்கை எழில் கொஞ்சும் கேரள மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம்தான் பாலக்காடு மாவட்டம்இம்மாவட்டத்தின் சிறப்புக்கள் குறித்து இ .ங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

## பாலக்காடு மாவட்டம் - அமைவிடம்

இந்தியாவின் தென்மேற்குக் கடலோரத்தில் அமைந்துள்ள கேரள மாநிலத்தின் மத்தியப் பகுதியில் பாலக்காடு மாவட்டம் அமைந்துள்ளது. வடக்கு அட்சரேகை 10° 21’ - 11° 14’க்கும், கிழக்கு தீh;க்கரேகை 76° 02’ - 76° 54’க்கும் இடையில் இம்மாவட்டம் நிலைபெற்றுள்ளது. தமிழகத்தின் மேற்கு எல்லையில் அமைந்துள்ள இம்மாவட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தைக் கிழக்கு எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது. கோயம்புத்தூரிலிருந்து 25 கி.மீ தொலைவில் பாலக்காடு மாவட்டத்தின் எல்லை ஆரம்பமாகிறது.

## எல்லைகள்

கேரளத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இம்மாவட்டத்தில் வடக்குப் பகுதியில் மலப்புரம் மாவட்டமும் (கேரளம்) மேற்கு தெற்குப் பகுதிகளில் திருச்சூர் மாவட்டமும் (கேரளம்) கிழக்குப் பகுதியில் கோயம்புத்தூர் மாவட்டமும் (தமிழ்நாடு) எல்லைகளாக அமைந்துள்ளன. மஹாராஷ்டிராவின் காண்டேஷ் மாநிலத்திலிருந்து துவங்கி இந்தியாவின் தெற்கு எல்லை வரை நீண்டுகிடக்கும் மேற்குத்தொடர்ச்சி மலை பாலக்காடு மாவட்டத்தைத் தமிழக எல்லையிலிருந்து தனியாகப் பிரிக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தின் மேற்கு எல்லையாய் அமைந்த மேற்குத்தொடர்ச்சி மலை, பாலக்காடு மாவட்டத்தின் கிழக்கு எல்லையாய் நீண்டு கிடக்கிறது. இந்த மலைத்தொடரில்தான் 30-40 கிமீ (19-25 மைல்) நீளமுள்ள ‘பாலக்காட்டுக் கணவாய்’ அமைந்துள்ளது.

## பாலக்காட்டுக் கணவாய்

பாலக்காட்டுக் கணவாயின் மொத்த உயரம் 144 மீ ஆகும். வட எல்லையின் உயரம் 1100 மீட்டரும் தென் எல்லையின் உயரம் 2000 மீட்டரும் ஆக உள்ளது. வட எல்லைப் பகுதியில் வாளையார் மலையும் தென் எல்லைப் பகுதியில் ஆனைமலையும் அமைந்துள்ளன. கேரளம் மற்றும் தமிழ்நாட்டின் காலநிலை மாற்றத்திற்கு இக்கணவாய் பெரும்பங்கு வகிக்கிறது. தென்மேற்குப் பருவமழையை பாலக்காட்டிலிருந்து கோயம்புத்தூருக்குக் கடத்தி விடுவதால்தான் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் வறண்ட காலநிலை அனுபவப்பட்டாலும் கோயம்புத்தூரில் குளிர்ச்சி அனுபவப்படுகிறது. அதேபோல் கோடைக் காலத்தில் கேரளாவின் மற்ற மாவட்டங்களைவிட பாலக்காடு மாவட்டத்தில் வெப்பநிலை அதிகமாக இருக்கக் காரணம் இக்கணவாய் வழியாக தமிழ்நாட்டிலிருந்து வரும் வெப்பக்காற்றுதான். இவ்வாறு இருவேறு மாவட்டங்களின் காலநிலை மாற்றத்திற்கு இக்கணவாய் பெரும் உதவி செய்கிறது.

முற்காலத்தில் பிற பகுதிகளில் உள்ள மக்கள் கேரளாவில் குடிபெயர்ந்து வருவதற்கும் வியாபாரிகள் வந்து வியாபாரம் செய்துவிட்டுச் செல்லவும் இக்கணவாய் முக்கிய வழியாக இருந்திருந்தது. பாலக்காட்டில் வாழும் தமிழ்ப் பிராமணர்கள் தமிழகத்தின் தஞ்சாவுர் கும்பகோணம் பகுதிகளிலிருந்து 15 18ஆம் நூற்றாண்டுகளில் இக்கணவாய் வழியாகக் குடியேறி வந்ததாகக் கூறப்படுகிறது. மைசூர் அரசன் ஹைதார் அலி இக்கணவாய்

வழியாகத்தான் பாலக்காடு மீது படையெடுத்து வந்தான். என்.எச் 47 தேசியப்பாதையும் கோயம்புத்தூர் ஷொர்ண்ணூர் இரயில்பாதையும் இக்கணவாய் வழியாகக் கடந்துபோகின்றன. வரலாற்றுச் சிறப்புடைய இக்கணவாய் போக்குவரத்திற்குத் பெரிதும் துணைபுரிவதாக அமைந்துள்ளது.

## பரப்பளவு மற்றும் மாவட்ட வரலாறு

38863 ச.கி.மீ பரப்பளவு கொண்ட கேரள மாநிலத்தின் 11.5 சதவிகித இடத்தை இம்மாவட்டம் கொண்டுள்ளது. மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 1363 ச.கி.மீ பரப்பு வனப்பகுதியாக அமைந்துள்ளது. மீதிப்பகுதிகள் மலைப்பிரதேசங்களாகவும், தரிசு நிலங்களாகவும் உள்ளன. கேரள மாநிலத்தின் தோற்றம் குறித்துக் கூறப்படும் புராணக்கதை ஒன்று உள்ளது. பரசுராமன் தன் அவதார நோக்கம் முடிந்தவுடன் தன் கையிலிருந்த மழுவை அரபிக்கடலில் எறிந்ததாகவும் அம்மழு சென்று விழுந்த தூரம் வரையில் கடல் பின்வாங்கிச் செல்ல மீண்டுவந்த கரைப்பகுதிதான் கேரளமாநிலமாக உருவானது என்றும் அக்கதை கூறுகிறது. முற்காலத்தில் கேரளம் தமிழகத்தின் ஒரு பகுதியாகத்தான் இருந்தது. சேர சோழ பாண்டியர்களின் ஆட்சிக்காலத்தில் சேரர்களின் ஆட்சிப்பகுதியாகக் கேரளம் இருந்தது. "2-3 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் மலபார் பகுதியைக் கைப்பற்றியிருந்ததாகவும் அவர்களின் தலைமையிடங்களில் ஒன்றாகப் பாலக்காட்டுப் பகுதி இருந்ததாகவும் வில்லியம் லோகன் என்பார் கூறுகிறார்". அதன்பின் 'இரண்டாம் சேர வம்சம்' என அழைக்கப்பட்ட 'வர்மா' பரம்பரையினரின் ஆட்சி நிலவியது. "பல்லவர்கள் சேர அரசகுமாரிகளை மணமுடித்து அதன்மூலம் உருவான வாரிசுகள்தாம் 'வர்மா' எனும் அரச மரபிற்கு வித்திட்டது. சேகரி வர்மா, குலசேகர வர்மா, ராஜசேகர வர்மா, தாணுரவி வர்மா.................... என நீள்கிறது அந்தப் பட்டியல்".

அரசகுல ஆட்சி மறைவுக்குப் பின்னர், நாடுவாழிகளின் ஆட்சி துவங்கியது. புகழும் பணமும் நிறைந்த நாயர் குடும்பத் தலைவர்களே 'நாடுவாழிகள்' என அழைக்கப்பட்டனர். அப்போது இந்த இடம் வள்ளுவ நாடு, கொல்லங்கோடு, பாலக்காடு என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வள்ளுவநாட்டை 'வள்ளுவக்கோனாதிரி' எனும் பெயர் கொண்ட அரசரும், கொல்லங்கோட்டை 'கொல்லங்கோட்டு ராஜாவும்', பாலக்காட்டை ;சேகரி வர்மா' எனும் அரசரும் ஆட்சி செய்தனர். இம்மூவரும் 'உடையவர்கள்' என அழைக்கப்பட்டனர்.

1757ல் கோழிக்கோடு அரசரான 'சாமூதிரி' பாலக்காட்டுப் பகுதி மீது படையெடுத்தார். அவரது படைபலத்தை எதிர்கொள்ள முடியாத உடையவர்கள் மைசூர் அரசர் ஹைதர் அலியின் உதவியை நாடினர். பின்னர் சாமூதிரிக்கும், ஹைதர் அலிக்கும் நடந்த போரில் சாமூதிரியை வெற்றி கொண்ட ஹைதர் அலி, பாலக்காடு மற்றும் இதர மலபார் பகுதிகளைத் தம் வசப்படுத்திக் கொண்டார். 1792ல் ஹைதர் அலியின் மகனான திப்பு சுல்தானுக்கும், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஏற்பட்ட போரில் திப்பு சுல்தான் தோற்கடிக்கப்பட்டார் அப்போது ஏற்பட்ட மலபார் உடன்படிக்கையின்படி மலபார் பகுதி ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கைவசமானது.

இந்தியா சுதந்திரமடைந்தபின் 1956-ல் மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, மலபார் மற்றும் இதரப்பகுதிகள் இணைக்கப்பட்டு கேரளமாநிலமாக உருவாக்கப்பட்டது. கேரளமாநிலம் நிலவில் வந்தபோது திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம், திருச்சூர், மலபார் ஆகிய ஐந்து பகுதிகள் அதில் இணைக்கப்பட்டிருந்தன. மலபார் பகுதியைப் பிரித்துப்

பின்னாளில் பாலக்காடு, கோழிக்கோடு, மலப்புரம் போன்ற மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. பாலக்காடு மாவட்டம் 1957 ஜனவரி1-ஆம் தேதி உருவாக்கப்பட்டது.

## பெயர்க்காரணம்

மாவட்டத்தின் பெயர்க்காரணம் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவை:

1) "முற்காலத் தமிழர் தம் கடவுள் வழிபாட்டில் மரங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. பாலை, நெல்லி, வேம்பு, காஞ்சிரம், பனை போன்ற மரங்களின் கீழ் அம்மனைப் பிரதிஷ்டை செய்து வழிபடும் வழக்கம் இருந்துள்ளது. காலப்போக்கில் அந்த அம்மனுடன் சேர்த்து அந்த மரத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து வழிபடும் நிலை உருவானது. அத்தகைய வழிபாட்டின் மூலம்தான் இம்மாவட்டத்திற்கு இப்பெயார்வந்ததாக ஒரு கருத்து நிலவுகிறது. பாலக்காடு மாவட்டத்திலுள்ள 'நெல்லியாம்பதி எனுமிடத்தின் தென்பகுதியிலுள்ள வெங்கலமுடிக்கும், கல்யாணப் பந்தலுக்கும் இடையிலுள்ள வனப்பகுதியில் 'பாலக்கடவம்மன் கோவில்' எனும் பழம்பெரும் கோயில் ஒன்று உள்ளது. பாலை மரத்தின் கீழ் அமர்ந்த நிலையில் அங்கே அம்மன் அருள் பாலிக்கிறாள். அம்மன் அருளால் பிரசித்திப் பெற்ற அவ்விடத்தின் பெருமை பக்கத்திலுள்ள ஊர்களிலெல்லாம் பரவியிருந்தது. அதன் மூலமாகத்தான் பாலக்காடு மாவட்டத்திற்கு இப்பெயர் வந்திருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது".

2) பண்டையத் தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கிய இன்றைய கேரளத்தில் முற்காலத்தில் சமணமும், பௌத்தமும் செல்வாக்குப் பெற்றிருந்தன. அதற்கான வரலாற்றுச் சான்றுகளும் பண்பாட்டுச் சான்றுகளும் ஏராளம் உள்ளன. இச்சமயங்கள் பாலி மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தன. "சமணமும் பௌத்தமும் இங்குச் செல்வாக்குப் பெற்றிருந்ததால், பாலி மொழியும் இங்கு வழக்கில் இருந்துள்ளது. பாலி மொழி வழங்கி வந்த இடமாதலால் 'பாலிக்காடு' எனப் பெயர் பெற்றதாகவும், காலப்போக்கில் அது 'பாலக்காடு' என்று மாற்றம் பெற்றதாகவும் கூறப்படுகிறது".

தமிழர் மரபில் ஐந்திணைகளில் ஒன்று பாலைத்திணையாகும். 'பாலை' என்பதற்கு 'வறண்ட நிலப்பகுதி' என்று பொருள் கூறப்படுகிறது.

"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்"

- என்று சிலப்பதிகாரம் விளக்கம் கூறுகிறது. "பாலக்காடு மாவட்டம் வறண்ட நிலப்பகுதிகளைப் பெரும்பான்மையாகக் கொண்டிருப்பதால் 'பாலை+காடு பாலைக்காடு' எனப் பெயர் வந்திருக்கலாம் என்றும், காலப்போக்கில் ஐகாரம் மறைந்து 'பாலக்காடு' ஆகியிருக்கலாம் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்". ஆனால் பாரதப்புழையும், அதன் கிளைநதிகளும், ஏராளமான ஏரிகளும், குளங்களும். பசுமையான வயல்களும் நிறைந்த பாலக்காடு மாவட்டம் வளம் மிக்க பகுதியாக இருப்பதால் இக்கூற்றுப் பொருத்தமற்றதாகவே தோன்றுகிறது.

3) "பாலை மரங்கள் அதிகமாக நிறைந்தும் வனப்பகுதிகள் அடர்ந்தும் காணப்படுவதால் 'பாலை மரங்கள் நிறைந்த காடு' எனும் பொருளில் 'பாலைக்காடு' எனப் பெயர் பெற்று, பின்னா; அது 'பாலக்காடு' ஆகியிருக்கலாம் என்னும் ஒரு கருத்தும் கூறப்படுகிறது". ஐகார

ஒலியை இறுதியாகக் கொண்ட தமிழ்ச் சொற்களின் ஐகாரம் மலையாளத்தில் 'அ'கரமாக மாறுவது இயல்பு. (உதா: மலை-மல, தலை-தல, கரை-கர). இம்மாற்றத்தைப் பேச்சு வழக்கிலும் காண இயலும். அது போல 'பாலைக்காடு' என்று வழங்கப்பட்ட தமிழ்ச் சொல்லிலுள்ள ஐகாரம் திரிந்து அகரமாகி 'பாலக்காடு' எனும் பெயராக மாற்றம் பெற்றதாகக் கொள்ள முடியும்.

4) "பாறைகள் நிறைந்த பகுதியாக இருப்பதால் 'பாறக்காடு' எனப் பெயர் பெற்றதாகவும், பின்னாளில் அச்சொல் 'பாலக்காடு' என மாறியதாகவும் கெ.வி. கிருஷ்ணய்யர் என்பார் கூறுகிறார்". பாலை மரத்தின் கீழ் வீற்றிருந்து அருள்புரியும் அம்மனை 'பாலி' என்றும், 'பாலாரி' என்றும் முற்காலத்தில் அழைத்தனா;". 'பாலி' அல்லது 'பாலாரி' அம்மனின் அருள் பெற்ற காடு ஆனதாலும், 'பாலை மரங்கள் நிறைந்த காடு' எனும் பொருளிலும், 'பாலக்காடு' எனும் பெயர் உருவாகியிருக்கலாம் எனக் கருதுவதுதான் பொருத்தமாக அமையும் என எண்ணத் தோன்றுகிறது.

## முடிவுரை

பாலக்காடு மாவட்டத்தின் தோற்றம் குறித்தும், வரலாறு குறித்தும் அறிவிப்பதாக இச்செய்திகள் அமைந்துள்ளன.

## பயன்பட்ட நூல்கள்


[1] பார்த்தசாரதி, சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள், தென்னிந்தியாவின் காவியம், கொலம்பியா பல்கலைக்கழக பதிப்பகம், நியூயார்க்.

[2] உபிந்தர் சிங், பண்டைய மற்றும் ஆரம்பகால இடைக்கால இந்தியாவின் வரலாறு: கற்காலம் முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை, பியர்சன் கல்வி இந்தியா.

[3] அ. ஸ்ரீதர மேனன், கேரள வரலாற்றின் ஒரு ஆய்வு, சாஹித்ய ப்ரவர்த்தகா கூட்டுறவு சங்கம், தேசிய புத்தக நிலையம், இந்தியா.


### References


[1] Parthasarathy, translated, and with an introduction and postscript by R. (1992), The Cilappatikāram of Iḷaṅko Aṭikaḷ : an epic of South India. New York: Columbia University Press.

[2] Upinder Singh, (2008), A History of Ancient and Early Medieval India: From the Stone Age to the 12th Century, Pearson Education India.

[3] A Sreedhara Menon, A Survey of Kerala History, Sahitya Pravarthaka Co-operative Society, National Book Stall, 1967.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License